# நமது தின கனி
காலை நாளிதழ்
NAMADHU DHINA KANI
Daily Morning

Vol : 01 | Issue : 59 | 4 Pages | 29.09.2023 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur
மலர் : 01 | இதழ் : 59 | 4 பக்கங்கள் | 29.09.2023 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர்

## எம்.எஸ். சுவாமிநாதன் உடலுக்கு அரசு மரியாதையுடன் இறுதி அஞ்சலி.. மு.க. ஸ்டாலின் உத்தரவு

**சென்னை,செ.29**

பசிப்பிணி ஒழிப்பு உணவுப் பாதுகாப்பு என்ற இரு குறிக்கோள்களுக்காகக் கடந்த முக்கால் நூற்றாண்டு காலம் அரும் பணி ஆற்றி வந்த தலைசிறந்த வேளாண் அறிவியலாளர் திரு. எம்.எஸ். சுவாமிநாதன் அவர்கள் மறைவுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் இரங்கல் செய்தி வெளியிட்டு இருந்தார்.



நீடித்து நிலைத்த உணவுப் பாதுகாப்புக்காக ஆற்றிய பங்களிப்புகளுக்காக பசுமைப் புரட்சியின் தந்தை எனப் பரவலாகப் போற்றப்படும் சுவாமிநாதன் அவர்கள் உலக அரிசி ஆராய்ச்சி நிறுவனம் (IRRI), இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில் (ICAR) முதலிய பல்வேறு பன்னாட்டு மற்றும் அரசு ஆராய்ச்சி நிறுவனங்களின் உயர் பொறுப்புகளில் பணியாற்றிய சிறப்புக்குரியவர் ஆவார். சமூகத் தலைமைக்கான ராமன் மகசேசே விருது, பத்ம ஸ்ரீ, பத்ம பூசன், பத்ம விபூசன் உள்ளிட்ட பல்வேறு உயரியவிருதுகளைதிரு.சுவாமிநாதன் அவர்கள் பெற்றுள்ளார்.

உலகம் போற்றும் விஞ்ஞானியாக சுற்றுச்சூழல் வேளாண்மைத்துறையில் அளப்பரிய பங்காற்றிய சுவாமிநாதன் அவர்களை கௌரவிக்கும் விதமாக, அவருக்கு காவல்துறை மரியாதையுடன் இறுதி அஞ்சலி செலுத்தப்படும் என்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் ஆணையிட்டுள்ளார்.

## டாஸ்மாக் கடை அமைக்க எதிர்ப்பு தெரிவித்து சாலை மறியல் போராட்டம் பொதுமக்கள் அறிவிப்பு

**ஊத்துக்குளி,செப்.29**

திருப்பூர் மாவட்டம் ஊத்துக்குளி வட்டம், வடுகபாளையம் கிராமம், கே.கே.நகர் பகுதியில் குடியிருப்பு மற்றும் தொழிற்சாலைகள் அமைந்துள்ள பகுதியில் புதிதாக டாஸ்மாக் கடை அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து அப்பகுதி மக்கள் சார்பில் திருப்பூர் மாவட்ட கலெக்டரிடம்புகார்மனுகொடுக்கப்பட்டுள்ளது. அதில் கூறியிரு ப்பதாவது: ஊத்துக்குளி வட்டம், வடுகபாளையம் கிராமம், கே.கே.நகர் பகுதியில் டாஸ்மாக்கடை அமைப்பதற்கு சிலர் முயற்சித்து வருகிறார்கள். கடை எண் 3679ஐ இடமாற்றம் செய்து வடுகபாளையம் கிராமம், கே.கே.நகர் பகுதியில் அமைக்கப்பட உள்ளதாக தெரிகிறது. இதேபோல் ஏற்கனவே 2017ம் ஆண்டு புதிய கடை அமைக்க முயற்சித்தபோது சென்னை உயர்நீதிமன்றத்தில் தடையாணை பெறப்பட்டது. தற்போது மீண்டும் டாஸ்மாக் கடை அமைப்பதற்கு தீவிர முயற்சி செய்து வருகிறார்கள். டாஸ்மாக் கடை அமையும் பட்சத்தில் அங்கு வரும் குடிமகன்களால் பெண்களுக்கு மிகப்பெரிய தொல்லைகள் ஏற்படும். இது தவிர அருகாமையில் உள்ள விவசாய நிலங்கள், வழித்தடங்கள், காலி மனைகளில் குடிமகன்களால் சுகாதார சீர்கேடு ஏற்படும்அபாயம்உள்ளது. டாஸ்மாக்வருவதால் பல பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே கே.கே.நகர் பகுதியில் டாஸ்மாக் கடை அமைக்கக்கூடாது என்று கூறியிருந்தனர். மேலும் டாஸ்மாக் கடைக்கு எதிர்ப்பு தெரிவித்து அப்பகுதி பொதுமக்கள் சாலை மறியல் போராட்டம் நடத்தப்போவதாக கூறி அங்கு அறிவிப்பு பலகை வைத்துள்ளனர். எனவே டாஸ்மாக் கடை அமைக்கக்கூடாது. உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் எங்களது போராட்டம் தீவிரமாகும் என அப்பகுதி பொதுமக்கள் தெரி வித்துள்ளனர்.




## நாகப்பட்டினம் மாவட்ட காவல்துறை குழந்தைகளுக்கு சிறப்பு உணவு

**நாகப்பட்டினம்,செப்.29**

மகிழ்ச்சியில் நிறைந்த மழலையர் ப்பள்ளி, வானவில் மழையர் மற்றும் தொடக்கப்பள்ளி குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கிய நாகை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு ஹர்ஷ் சிங் . மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் அழகாய் ABCD சொல்லும் பள்ளி குழந்தைகள்நாகப்பட்டி னம் மாவட்டம் சிக்கல் அருகே உள்ளகீழக்கரை இருப்பு கிராமத்தில் பூம்பூம் மாட்டுக்காரர்கள் மற்றும் நரிக்குறவர்கள் என்று சொல்லக்கூடிய நாடோடி இன பழங்குடியினரின் முதல் தலைமுறை பிள்ளைகளுக்கான வானவில் பள்ளி செயல்பட்டு வருகிறது.



இங்கு LKG முதல் 5ஆம் வகுப்பு வரை 120 மாணவர்களும் 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை 50 மாணவர்கள் என 170 மாணவர்கள் இலவசமாக தங்கி கல்வி கற்று வருகின்றனர். இவர்களுக்கு நேசம் பாசறை அறக்கட்டளை சார்பில் நபிகள் நாயகம் பிறந்த நாளை முன்னிட்டு நேற்று அறுசுவை உணவு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது.

சிறப்பு விருந்தினராக மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு ஹர்ஷ் சிங் இ. கா.ப அவர்கள் பங்கேற்று மாணவர்களுக்கு உணவு பரிமாறி அவர்களுடன் கலந்துரையாடி மகிழ்ந்தார்கள்.

## பூதப்பாண்டி பேரூராட்சி 8வது வார்டு பகுதிக்கு வடிகால் ஓடை

**கன்னியாகுமரி,செப்.29**

கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை தாலுகாவிற்குட்பட்ட பூதப்பாண்டி பேரூராட்சி 8வது வார்டு பகுதிகளான பூதப்பாண்டி அழகம்மன்கோவில் தெருவில் அம்மக்களின் நீண்டநாள் கோரிக்கையினை ஏற்று பூதப்பாண்டி பேரூராட்சி நிர்வாகம் அப்பகுதியில் சில மாதங்களுக்குமுன்புவடிகால்ஓடைஅமைத்தது. வடிகால் ஓடை அமைத்தற்கு பூதப்பாண்டி அழகம்மன்கோவில் தெரு மக்கள் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறோம். அதே நேரத்தில்வடிகால்ஓடையினை தரமான முறையில் வாட்டம் போடாததால் தண்ணீர் தேங்கி டெங்கு நோய் பரவும் அபாயம் சூழ்ந்துள்ளது. அதுமட்டுமன்றி தரமான முறையில் வடிகால் ஓடையில் வாட்டம் போடாததால் நாளடைவில் வடிகால் ஓடை திறன் இன்றி இடிந்துவிழும் சூழலும் அமைந்துள்ளது. எனவே பூதப்பாண்டி பேரூராட்சி நிர்வாகம் உடனடியாக பூதப்பாண்டி அழகம்மன்கோவில் தெருவில் வடிகால் ஓடையில் தரமான முறையில் வாட்டம் போட்டு நீர்தேங்காதவாறு நோய்தொற்று பரவாமல் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ள கேட்டு இன்று பூதப்பாண்டி பேரூராட்சி செயல்அலுவலர் திரு. பாலசுப்பிரமணியம் அவர்களிடம் பாஜக கன்னியாகுமரி மாவட்ட நலத்திட்ட பிரிவு மாவட்டசெயலாளர் திரு.V.P.விஜய் மணியன் அவர்கள்தலைமையிலும், பாஜக கன்னியாகுமரி மாவட்ட தொழிற்பிரிவு மாவட்ட துணைத்தலைவர் ரெங்கன் முன்னிலையில் மனுகொடுக்கப்பட்டது. அருகில் பாஜக பேரூர் உறுப்பினர்



எஸ்.நாராயணசாமி, சுடலை மணி கலந்துக்கொண்டனர். விரைந்து நடவடிக்கை எடுப்பதாக பேரூராட்சி செயல்அலு வலர் உறுதியளித்துள்ளார்.

## திருப்பூர் மாவட்டத்தில் 41 இடங்களில் நாட்டு நலப்பணி திட்ட முகாம்

**திருப்பூர்,செ.29**


திருப்பூர்மாவட்டத்தில் 41 இடங்களில் நாட்டு நலப் பணித் திட்ட முகாம் இன்று தொடங்கியது. இது குறித்து மாவட்ட என்.எஸ்.எஸ். திட்ட அலுவலர் முருகேசன் கூறியதாவது:

திருப்பூர் மாவட்டத்தில் இடுவம்பாளையம், தொங்குட்டிபாளையம், பள்ளிபாளையம், கணக்கன்பாளையம், பழனியாண்டவர் நகர், கிருஷ்ணாபுரம், அண்ணாநகர், பந்தம்பாளையம், சொரியன்கிண த்துபாளையம், பழையூர், எலவந்தி, வடுகபாளையம், சேடபாளையம், நாகலிங்கபுரம், முத்தனம்பாளையம், சென்னிமலைப்பாளையம், பொலைய ம்பாளையம் உள்ளிட்ட 41 இடங்களில் நாட்டு நலப் பணித் திட்ட சிறப்பு முகாம் இன்று முதல் தொடங்கி அக்டோபர் 4 ந தேதி வரை நடைபெறவுள்ளது. இம்முகாமில் இளைஞர் உடல் நலம் காத்தல், ஆன்மிகம் பற்றிய விழிப்புணர்வு கோயில் வளாகம் சுத்தம் செய்தல், சுற்றுப்புறச்சூழல் காத்தல், மரம் நடுதல், இயற்கை விவசாயம், பொது மருத்துவ முகாம், பிளாஸ்டிக்கழிவுகளை அகற்றுதல் நடைபெறவுள்ளது. மேலும், நோய்கள் பற்றிய விழிப்புணர்வு கருத்தரங்கம், மனநலம், உடல்நலம் காத்தல், யோகாவின் முக்கியத்துவம் போன்றவை குறித்தும் விளக்கப்படவுள்ளது. இம்முகாமில் 1, 230 மாணவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர் என்றார்.

## 375 ஆண்டுகளாக மறைந்திருந்த உலகின் 8வது கண்டம் கண்டுபிடிப்பு

**டெல்லி,செப்.29**

உலகில் தற்போது வரை ஆசியா, தென் அமெரிக்கா, வட அமெரிக்கா, ஆப்பிரிக்கா, அண்டார்டிகா, ஐரோப்பா மற்றும் ஆஸ்திரேலியா உள்ளிட்ட 7 கண்டங்கள் உள்ளன. ஆனால், பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் கண்டங்கள் எப்படி இருந்தன என்பது புரியாத புதிரான நிலையில் தற்போது உலகின் 8வது கண்டத்தை புவியியல் ஆய்வு விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளார்கள். இந்த கண்டத்திற்கு விஞ்ஞானிகள் ஜீலந்தியா என்று பெயரிட்டுள்ளனர். கடல் தளத்தில் இருந்து மீட்கப்பட்ட பாறை மாதிரிகளில் இருந்து பெறப்பட்ட தகவல்களை பயன்படுத்தி ஆராய்ச்சியாளர்கள் புதிய கண்டத்தை கண்டு பிடித்துள்ளனர். இந்த கண்டம் 375 ஆண்டுகள் மறைந்திருந்ததாகவும் அவர்கள் கூறியுள்ளனர். இது நியூசிலாந்துக்கு அருகே உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பசிபிக் பெருங்கடலின் தெற்குப் பகுதியில் சுமார் 3500 அடி ஆழத்தில் இருப்பதாகக் கூறப்படுகிறது. இந்த புதிய கண்டத்தின் 94 சதவீத பகுதி நீருக்கு அடியில் மூழ்கியுள்ளது. ஒட்டுமொத்தமாக 49 லட்சம் சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டதாக இந்த கண்டம் அமைந்துள்ளது. இதில் நியூசிலாந்தை போல சில தீவுகள் உள்ளதாக விஞ்ஞானிகள் கூறியுள்ளனர். இது மடகாஸ்கர் தீவை காட்டிலும் 6 மடங்கு பெரியது என தெரிவித்துள்ளனர். உலகின் பெரிய பெருங்கடலான பசிபிக் பெருங்கடலில் ஏற்கனவே பல மர்மங்கள் உள்ளன. இப்போது அதில் ஒரு கண்டமே ஒளிந்திருப்பதாக கூறுகின்றனர். ஜீலந்தியா கண்டத்தைப் பற்றி இன்னும் பல விஷயங்கள் கண்டுபிடிக்கப்படாமல் இருப்பதாக புவியியலாளர்கள் கூறுகின்றனர். இது எப்போது நீருக்கடியில் சென்றது? என்பது குறித்த ஆய்வில் அறிவியலாளர்கள் ஈடுபட்டு உள்ளனர். தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள இக்கண்டமானது விரைவில் அதிகாரப்பூர்வமாக அங்கீகாரம் வழங்கப்பட்டு உலகின் 8வது கண்டமாக அறிவிக்கப்படும் என்றும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். தென் தமிழகத்தில் இந்திய பெருங்கடலில் லெமூரியா கண்டம் கடலுக்குள் மூழ்கி இருப்பதாகவும், தமிழர்கள் இங்குதான் தோன்றினர் என்றும் ஆராய்ச்சியாளர்கள் கூறி வருகின்றனர். அதன் அடிப்படையில் பார்த்தால் இப்போது கண்டு பிடிக்கப்பட்டுள்ள ஜீலந்தியா 9வது கண்டமா? என்ற கேள்வியையும் அறிவியலாளர்கள் எழுப்பி உள்ளனர்.



## அப்போது பயங்கரவாதிகள்.. இப்போது? பிச்சைக்காரர்களை ஏற்றுமதி செய்யும் பாகிஸ்தான்

பல வருடங்களாக இந்தியாவிற்கெதிரான பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த பாகிஸ்தான், தற்போது பெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்கி தவிக்கிறது. வரலாறு காணாத விலைவாசி உயர்வு, வேலையில்லா திண்டாட்டம், பெட்ரோல் விலையேற்றம் மற்றும் மின்சாரதட்டுப்பாடு ஆகியவற்றால் அங்கு வாழ்வாதாரமே கேள்விக்குறியாகி விட்டது. சொந்த நாட்டில் பிழைக்க வழியில்லாததால் பலர் அங்கு பிச்சையெடுக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். அதன் தொடர்ச்சியாக அந்த பாகிஸ்தானிய பிச்சைக்காரர்கள் கும்பல் கும்பலாக ஈராக், சவுதி அரேபியா உள்ளிட்ட அரபு நாடுகளில் சட்டவிரோதமாகவும் சட்டரீதியாகவும் உள்ளே நுழைந்து அங்கேயும் பிச்சை எடுப்பதில் ஈடுபடுகின்றனர். அரபு நாடுகள் பலவற்றில் பிச்சை எடுப்பது தடை செய்யப்பட்டுள்ளது. பிச்சை எடுப்பவர்களுக்கு சிறை தண்டனை வழங்குவது அங்கு வழக்கம். அவ்வாறு சிறையிலடைக்கப்பட்ட பிச்சைக்காரர்களில் 90 சதவீதத்திற்கும் அதிகமானோர் பாகிஸ்தான் நாட்டை சேர்ந்தவர்கள் என ஒரு ஆய்வில் தெரிய வந்துள்ளது. பாகிஸ்தானிலிருந்து அந்நாடுகளுக்கு செல்லும் விமானங்களில் பிச்சைக்காரர்களே அதிகம் பயணம் செய்கின்றனர். இவர்கள்வருகையை தடுக்க நடவடிக்கை எடுக்க சவுதி அரேபியாவும், ஈராக்கும் பாகிஸ்தானிடம் கோரிக்கை வைத்துள்ளன. புத்திசாலித்தனமான வழிமுறையை அவர்கள் கையாண்டு உள்ளே வருவதால் தடுப்பதற்கு அந்த நாடுகள் திணறுகின்றன. சட்ட ரீதியாக அங்கு நுழைய முயல்பவர்கள், இஸ்லாமியர்களுக்கு மட்டுமே வழங்கப்படும் 'உம்ரா விசா' எனும் அனுமதியை பெற்று அங்கு நுழைகிறார்கள். வந்தவுடன் சாலைகளில் பிச்சையெடுக்கும் தொழிலில் ஈடுபடுகின்றனர். இது தவிர இஸ்லாமியர்களின் புனித தலமான மெக்கா இருக்கும் சாலைகளில் பிக்பாக்கெட் குற்றத்தில் ஈடுபடும் பெரும்பகுதியினரும் பாகிஸ்தானியர்களே எனவும் அந்த ஆய்வில் தெரிய வந்திருக்கிறது. உலக அரங்கில் பாகிஸ்தானை இது தலைகுனிய செய்திருக்கிறது. ஒரு காலத்தில் பயங்கரவாதிகளை ஏற்றுமதி செய்து வந்த பாகிஸ்தான், தற்போது பிச்சைக்காரர்களை ஏற்றுமதி செய்வதாக சமூக வலைதளங்களில் பயனர்கள் பதிவிட்டு வருகின்றனர்.







## இணைந்து வாழாமல் இணையாக வாழ்கிறார்கள்: அகதிகள் குறித்து இங்கிலாந்து செயலர்

**அமெரிக்கா,செப்.29**

இங்கிலாந்து நாட்டின் உள்துறை செயலாளராக பணிபுரிபவர் சுவெல்லா பிரேவர்மேன் (Suella Braverman). அமெரிக்காவில் வாஷிங்டனில் உள்ள அமெரிக்கன் எண்டர்பிரைஸ் எனப்படும் நிறுவனம் நடத்திய நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்று பேசினார். அப்போது அவர் பேசியதாவது: பன்முக கலாச்சாரம் தோல்வியடைந்து விட்டது. பன்முக கலாச்சாரம் என்பது தற்காலத்திற்கு ஒவ்வாத சித்தாந்தம். இந்த தவறான சித்தாந்தத்தால் இங்கிலாந்திற்குள் அகதிகளாக பலர் வரும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இந்த சித்தாந்தத்தின்படி ஒரு நாட்டிற்குள் அகதிகளாக வருபவர்களுக்கு அந்த நாட்டு மக்களோடு இணைந்து வாழ வேண்டும் எனும் கட்டாயம் இல்லாத நிலை உள்ளது. இதனால் பல சிக்கல்கள் ஏற்படுகிறது. அவர்கள் குடியேறும் நாட்டு மக்களோடு இணைந்து வாழாமல் தங்கள் கலாச்சாரத்தையே பின்பற்றி தனியாக வாழ்கிறார்கள். ஒரு சில சமயம், நாட்டின் பாதுகாப்பிற்கும், சமூக அமைதிக்கும் கேடு விளைவிக்கும் செயல்களிலும் ஈடுபடுகிறார்கள். ஐரோப்பாவின் அனைத்து நகரங்களின் தெருக்களிலும் பன்முக கலாச்சாரம் தோல்வியடை ந்ததற்கான அடையாளங்கள் தெரிகின்றன. இங்கிலாந்தில் லெய்சஸ்டர்பகுதியில்கடந்தவருடம்நடந்தமோதல்களும்இதில்அடங்கும். ஒரு நாட்டின் கலாச்சாரத்தில் பெரும் வேகத்தில், பெரும் திரளாக வேறொரு கலாச்சாரத்தை சேர்ந்தவர்கள் உள்ளே நுழையும் போது, அந்நாட்டில் ஏற்கெனவே இருந்த கலாச்சாரம் நீர்த்து போகிறது. இவ்வாறு சுவெல்லா தெரிவித்தார். ஆனால், ஐ.நா. கூட்டமைப்பின் அகதிகளுக்கான அமைப்பு, சுவெல்லாவின்கருத்துக்களுக்குஆட்சேபம்தெரிவித்துள்ளது. இங்கிலாந்தில், எதிர்கட்சியான லேபர் கட்சியை சேர்ந்தவர்கள் இவரது கருத்துக்களை எதிர்க்கின்றனர். ஆனால் சுவெல்லா சார்ந்திருக்கும் கன்சர்வேடிவ் கட்சியை சேர்ந்தவர்கள் இதனை ஆதரித்து "உலகில் உள்ளவர்களுக்கெல்லாம் இங்கிலாந்து அகதிகள் முகாமாக இருக்க முடியாது" என கூறி வருகின்றனர்.





# வெள்ளிரவெளி அரசு பள்ளியில் ரூ.1.17 கோடி மதிப்பில் வகுப்பறைகள் கட்ட பூமி பூஜை



திருப்பூர்,செப்.29

வெள்ளிரவெளி அரசு மேல்நிலைப்பள்ளியில் ரூ.1.17 கோடி மதிப்பில் 6 வகுப்பறைகள் கட்டுவதற்கு பூமி பூஜை நடைபெற்றது.

இதில் திருப்பூர் கூலிப்பாளையம் விகாஸ் வித்யாலயா பள்ளி தாளாளர் ஆண்டவர் ராமசாமி, பள்ளியின்தலைமை ஆசிரியர் பூமாரி, ஊராட்சி ஒன்றிய குழு உறுப்பினர் கல்பனா, ஊராட்சி மன்ற தலைவர் சிவன்மலை, பள்ளி மேலாண்மை குழு தலைவர் கங்கா தேவி, பள்ளி கட்டிட வளர்ச்சி குழு தலைவர் சுப்பிரமணியம், அருண் பழனிச்சாமி, செந்தில் சுப்பிரமணியன், ஜோதி ரமேஷ் மற்றும் பெற்றோர் ஆசிரியர் கழக த்தலைவர் வேலுமணி மற்றும் பள்ளி ஆசிரியர்கள் மற்றும் ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.நிகழ்ச்சியில் வகுப்பறை கட்டிடப்பணி ஒப்பந்ததாரர் என்ஜினீயர் சுகுமாருக்கு, விகாஸ் வித்யாலயா பள்ளி தாளாளர் ஆண்டவர் ராமசாமி பொன்னாடை போர்த்தினார்.

# திருப்பூர் மாவட்டத்தில் 134 கிலோ புகையிலை பொருட்கள் பறிமுதல்




திருப்பூர்,செப்.29

திருப்பூர் மாவட்ட கலெக்டர் கிறிஸ்துராஜ் உத்தரவின் பேரில் மாவட்ட உணவு பாதுகாப்பு துறை நியமன அலுவலர்விஜயலலிதாம்பிகை தலைமையில் மாவட்டத்தில் உள்ள கடைகளில் தடை செய்யப்பட்ட குட்கா, பான்மசாலா உள்ளிட்ட பொருட்கள் விற்பனை தொடர்பாக ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர். அதன்படி திருப்பூர் மாவட்டத்தில் 146 கடைகளில் கடந்த ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதில் 44 கடைகளில் விற்பனைக்கு வைக்கப் பட்டிருந்த 134 கிலோ புகையிலை பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டதுடன், கடை உரிமையாளர்களுக்கு ரூ.2.45 லட்சம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. மேலும், தொடர் விற்பனையில் ஈடுபட்ட 17 கடைகள் மூடப்பட்டன. புகையிலை பொருட்கள் விற்பனை மற்றும் உணவுப் பொருட்களின் தரம் குறித்த புகார்களை 9444042322என்றவாட்ஸ் அப் எண்ணில் பொதுமக்கள் தெரிவிக்கலாம் என்று உணவு பாதுகாப்புத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

# வேளாண் பொறியியல் படிப்புகளுக்கான இணைய வழி கலந்தாய்வில் பங்கேற்க கால அவகாசம் நீட்டிப்பு




உடுமலை,செப்.29

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் பொறியியல் படிப்புகளுக்கான இணைய வழி கலந்தாய்வில் பங்கேற்க கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது. அதன்படி இன்று மாலை 5 மணி வரை விருப்ப கல்லூரி பாடப்பிரிவுகளை தேர்வு செய்யலாம். முன்பு பதிவு செய்தவர்கள், விருப்பங்களை மாற்றி வரிசைபடுத்திக்கொள்ளலாம்.

இறுதியாக, வரிசை படுத்தப்பட்டுள்ள பட்டியல் இடஒதுக்கீடுக்கு எடுத்துக்கொள்ளப்படும். மேலும் முழுமையான விபரங்களை, http://tnagfi.ucanapply.com என்ற இணையதளத்தில் பார்க்கலாம்.

சந்தேகங்கள் இருப்பின் 94886 35077, 94864 25076 என்ற எண்ணுக்கு தொடர்பு கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மங்கலம் ஊராட்சி அக்ரஹாரப்புத்தூர் பகுதியில் புதிய வகுப்பறைகள் கட்டிடம் திறப்பு விழா



மங்கலம்,செப்.29

திருப்பூர் மாவட்டம்,மங்கலம் ஊராட்சி அக்ரஹாரப்புதூர் பகுதியில் குழந்தைகள் நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின் சார்பில் ரூ.30 லட்சத்து 20 ஆயிரம் மதிப்பீட்டில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி வளாகத்தில் கூடுதல் இரண்டு வகுப்பறை கட்டிடம் புதிதாக கட்டப்பட்டது.

இந்த வகுப்பறைகள் கட்டிடத்தை தமிழக முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் காணொலி காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார். பின்னர் புதிய இரண்டு வகுப்பறைகள் கட்டிடத்தை மங்கலம் ஊராட்சி மன்றத்தலைவர் எஸ்.எம்.பி.மூர்த்தி ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்.

இதைத்தொடர்ந்து குத்து விளக்கு ஏற்றப்பட்டது.பள்ளி மாணவ, மாணவிகள், பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் மங்கலம் ஊராட்சி மன்ற துணைத்தலைவர் தாஹாநசீர், திருப்பூர் ஒன்றிய குழு உறுப்பினர் ஜானகி எபிசியண்ட் மணி, திருப்பூர் வட்டார ஆணையாளர் வேலுச்சாமி, உதவி பொறியாளர் கற்பகம், மங்கலம் ஊராட்சி மன்ற வார்டு உறுப்பினர்கள் முகமது இத்ரீஸ், மசூதாபேகம், அர்ஜ ௗனன், தி.மு.க. திருப்பூர் தெற்கு ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் சரவணக்குமார், எஸ்.டி.பி.ஐ.கட்சியை சேர்ந்த அபுதாஹிர், பள்ளி தலைமை ஆசிரியர் உமாராணி, மங்கலம் ஊராட்சி மன்ற வார்டு உறுப்பினர்கள், மங்கலம் ஊராட்சி செயலாளர், பள்ளியின் ஆசிரியர்கள், பொதுமக்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# க்யூ ஆர் கோடு மூலம் ரெயில் டிக்கெட் எடுக்கும் வசதி அறிமுகம்



உடுமலை,செப்.29

திருவனந்தபுரம் மதுரை அமிர்தா எக்ஸ்பிரஸ், பாலக்காடு திருச்செந்தூர், பாலக்காடு சென்னை மற்றும் கோவை மதுரை, பொள்ளாச்சி கோவை உள்ளிட்ட ரெயில்கள் உடுமலை, பொள்ளாச்சி வழியாக செல்கின்றன.இந்நிலையில் பயணிகள் நீண்ட வரிசையில் நிற்காமல், டிக்கெட் பதிவு செய்ய, யுடிஎஸ். மொபைல் ஆப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என ரெயில்வே நிர்வாகம் தெரிவித்துள்ளது. இது குறித்து பொள்ளாச்சி ரெயில் நிலையத்தில் க்யூ ஆர் கோடு அமைத்து, ரெயில்வே நிர்வாகம் விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது. ரெயில் நிலையம் அறிவிப்பு பலகையில், க்யூஆர் கோடு பார் யுடிஎஸ் ஆன் மொபைல் ஆப் என எழுதப்பட்டுள்ளது. அதில் க்யூ ஆர் கோடு ஸ்கேன் செய்யும் வகையில் ஒட்டப்பட்டு இருந்தன. இதை பயணிகள் ஸ்கேன் செய்தால் மொபைல் ஆப்பிற்குள் செல்கிறது. அதன்பின் யுடிஎஸ்., மொபைல் ஆப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். அதில் இருந்து முன்பதிவில்லாத டிக்கெட் (அன் ரிசவர்டு) சீசன் டிக்கெட் மற்றும் பிளாட்பார்ம் டிக்கெட்டுக்குரிய கட்டணத்தை ஆன்லைனில் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். டிக்கெட் பரிசோதகரிடம் காண்பித்து செல்லும் வகையில் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. பயணிகள் நேரம் வீணாகுவது, காத்திருப்பதை தவிர்க்கும் வகையில் இதுபோன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது குறித்து பயணிகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது என ரெயில்வே துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

# உடுமலையில் சாலையோரம் நிறுத்தப்படும் வாகனங்களால் பொதுமக்கள் அவதி



திருப்பூர்,செப்.29

போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில் உடுமலை பழனி நெடுஞ்சாலை உடுமலை மத்திய பஸ்நிலையத்தில் இருந்து கொழுமம் பிரிவு வரை அகலப்படுத்தப் பட்டு உள்ளது. இதனால் சீரான போக்குவரத்து நடைபெற்று வருகிறது. இந்த சூழலில் கடந்த சில நாட்களாக மத்திய பஸ் நிலைய ரவுண்டானா பகுதியில் இருந்து கழுத்தறுத்தான் பள்ளம் வரையில் சாலையின் இரண்டு புறங்களிலும் வாகனங்கள் வரிசை கட்டி நிறுத்தப்பட்டு வருகிறது. இதனால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு சாலையில் செல்கின்ற வாகன ஓட்டிகள் அவதிக்கு உள்ளாகி வருகிறார்கள். எங்கிருந்து இந்த வாகனங்கள் வருகிறது. எதற்காக அங்கு நிறுத்தப்படுகிறது என்பது தெரியவில்லை. தேசிய நெடுஞ்சாலையை பார்க்கிங் வசதியாக மாற்றும் வாகனங்கள் குறித்து போக்குவரத்து போலீசாரும் கண்டு கொள்வதில்லை. இதனால்சாலை அகலமானதற்கான நோக்கமும் வீணாகி உள்ளது. எனவே உடுமலைபழனி தேசிய நெடுஞ்சாலையின் இரண்டு புறங்களிலும் வாகனங்கள் நிறுத்தப்ப டுவதை கண்காணிக்க வேண்டும். இதற்காக போக்குவரத்து போலீசார் அங்கு ரோந்து பணியில் ஈடுபட வேண்டும் என்பது சமூக ஆர்வலர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது

# வயல்களிலேயே தக்காளி செடிகளை அழிக்கும் விவசாயிகள்



குடிமங்கலம்,செப்.29

உடுமலை, குடிமங்கலம், மடத்துக்குளம் பகுதிகளில் தக்காளி சாகுபடி பிரதானமாக உள்ளது. ஏறத்தாழ 30 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் தக்காளி சாகுபடி செய்யப்பட்டு, சீசன் காலங்களில் தினமும் ஒரு லட்சம் பெட்டிகள் வரை வரத்து காணப்படும். இப்பகுதிகளில் விளையும் காய்கறிகளை விவசாயிகள் உடுமலை நகராட்சி சந்தைக்கும், தனியார் ஏல மையங்களுக்கும் கொண்டு வந்து ஏல முறையில் விற்பனை செய்து வருகின்றனர். கேரளமாநிலம் மூணாறு, மறையூர் மற்றும் சென்னை, மதுரை, விருதுநகர் உட்பட பல்வேறு மாவட்டங்களிலிருந்து வியாபாரிகள் வந்து தக்காளி கொள்முதல் செய்து வருகின்றனர். நடப்பாண்டு கோடை மழை குறைந்ததோடு தக்காளி விலை கிலோ 5 ரூபாய் என்ற அளவில் குறைந்ததால் அதன் சாகுபடி பரப்பு பெருமளவு குறைந்தது. வழக்கமாக ஏப்ரல் மே மாதங்களில் நடவு செய்து ஜூன், ஜூலை மாதங்களில் சராசரியாக ஒரு லட்சம் பெட்டிகள் வரை வரத்து காணப்படும். நடப்பாண்டு தக்காளி சாகுபடி பரப்பு குறைந்ததால் கடந்த ஜூலை மாதம் அதன் விலை உச்சத்தை தொட்டது.அதிக பட்சமாக 14 கிலோ கொண்ட பெட்டி 2,400 ரூபாய் வரை ஏலம் போனது. இதனால் தக்காளி சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம் காட்டினர். இதனால் வழக்கத்தை விட சாகுபடி பரப்பு பெருமளவு அதிகரித்தது. தக்காளி அறுவடை தற்போது தீவிரமடைந்துள்ளது. வரத்து பெருமளவு அதிகரித்துள்ளது. உடுமலை மற்றும் சுற்றுப்புற கமிஷன் கடைகளுக்கு ஒரு லட்சம் பெட்டிகள் வரை வரத்து காணப்பட்டது. ஆனால் ஆந்திர மாநிலத்திலிருந்து தக்காளி வரத்து உள்ளதால் உடுமலை பகுதிகளுக்கு பிற மாவட்ட வியாபாரிகள் வரத்து குறைந்துள்ளது. இதனால் தக்காளி விலை கடும் சரிவை சந்தித்துள்ளது. 14 கிலோ கொண்ட பெட்டி 30 முதல் 90 ரூபாய் வரை மட்டுமே விற்றது. நடப்பாண்டு தென்மேற்கு பருவமழையும் ஏமாற்றியதால், உடுமலை சுற்றுப்பகுதிகளில் கடும்வறட்சிநிலவுகிறது. இதனால் தக்காளி செடிகள் வளர்ச்சி குறைவு, காய்கள் பிடிப்பது குறைவு, கடும் வெயில் காரணமாக நோய்த்தாக்குதல், காய்கள் சிறிய அளவில் மட்டுமே காணப்படுவது உள்ளிட்ட பல்வேறு காரணங்களினால் மகசூலும் பெருமளவு பாதித்துள்ளது. விலையும் குறைந்துள்ளதால், பறிப்பு கூலி கூட கட்டுபடியாகாமல், வயலில் பறிக்காமல் விடப்பட்டும் வயல்களிலேயே அழித்தும் வருகின்றனர். அதிக அளவு பழங்கள் வீணாகி, ரோடுகளில் வீசப்படுகிறது. இது குறித்து விவசாயிகள் கூறியதாவது: அதிக விலை கிடைக்கும், பருவ மழையும் கை கொடுக்கும் என்ற நம்பிக்கையில் தக்காளி சாகுபடி செய்யப்பட்டது. ஆனால் தற்போது விலை கடும் சரிவை சந்தித்துள்ளதோடு, பருவ நிலை மாற்றத்தால் ஒட்டு மொத்த பயிர் சாகுபடியும் பெரும் சிக்கலை சந்தித்துள்ளது. நாற்று, உரம், நடவு, மருந்து என ஏக்கருக்கு 40 ஆயிரம் ரூபாய் செலவாகியுள்ளது. பறிப்பு கூலி ரூ. 350, போக்குவரத்து கட்டணம், கமிஷன் என பறித்து சந்தைக்கு கொண்டு வந்தாலும் விலை கடும் சரிவால் வரவை விட செலவு அதிகமாக உள்ளது.இதனால் பறிக்காமல் வயல்களிலேயே விட வேண்டிய அவல நிலை உள்ளது. நடப்பு பருவத்தில் தக்காளி சாகுபடி பெரும் நஷ்டத்தை மட்டுமே ஏற்படுத்தியுள்ளது. வரத்து அதிகரிக்கும் போது தக்காளி சாஸ், ஜாம் உள்ளிட்ட மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களாக மாற்றுதல், குளிர்பதன கிடங்கு உள்ளிட்ட விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்கும் நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும் என்றனர்.

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

# உடுமலையில் குடிநீர் ஆப்ரேட்டர்களுக்கு குளோரினேசன் பயிற்சி



உடுமலை,செப்.29

பொது சுகாதாரம் மற்றும் மருந்து துறை சார்பாக மழைக்கால நோய்கள் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக உடுமலை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பயிற்சி நடைபெற்றது.இதில் உடுமலை வட்டாரத்தில் உள்ள கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் குடிநீர் திறப்பாளர்களுக்கு வட்டார மருத்துவ அதிகாரி தலைமையில் பயிற்சி அளிக்கப்பட்டது. அப்போது நீர்நிலைகளை சுத்தம் செய்தல் மற்றும் க்ளோரினேசன் செய்தல் பற்றி விரிவாக விளக்கம் அளிக்கப்பட்டது.இதில் மாவட்ட பூச்சியியல் வல்லுநர்,வட்டார வளர்ச்சி அலுவலர், வட்டார சுகாதார மேற்பார்வையாளர் மற்றும் சுகாதார ஆய்வாளர்கள் கலந்து கொண்டு பயிற்சி அளித்தனர். அப்போது குளோரினேசன் எவ்வாறு செய்ய வேண்டும் என்று செயல்முறை மற்றும் குறும்படம் மூலமாகவும் விளக்கம் அளிக்கப்பட்டது.

# அமராவதி ஆற்றில் பாலம் அமைக்க வேண்டும் திட்டக்குழு கூட்டத்தில் வலியுறுத்தல்



திருப்பூர் ,செப்.29

திருப்பூர்மாவட்ட திட்டக்குழு கூட்டம் கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்றது. கூட்டத்துக்கு திட்டக்குழு தலைவர் சத்தியபாமா தலைமை தாங்கினார்.

துணை தலைவரான கலெக்டர் கிறிஸ்துராஜ் பேசும்போது, 'மாவட்ட அளவில் முக்கியத்துவம் வாய்ந்த பணிகள், சாலைப்பணிகள் உள்ளிட்டவை திட்டக்குழு உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றி, மாநில திட்டக்குழு ஒப்புதல் பெற்று நிதி உதவியுடன் நிறைவேற்றப்படும்' என்றார். மாவட்ட திட்டமிடும் அலுவலர் முரளி கண்ணன் வரவேற்றார். திருப்பூர் சப்கலெக்டர் ஸ்ருதன் ஜெய் நாராயணன், திட்ட குழு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்களுக்கு விளக்கம் அளித்தார். கூட்டத்தில், அமராவதி ஆற்றின் தென்புறம் உள்ள கரைப்பகுதி மதுக்கம்பாளையம் மற்றும் அமராவதி ஆற்றின் வடபுறம் உள்ள கரைப்பகுதி குள்ளகாளிபாளையம் இடையே 250 மீட்டர் தூரம் கான்கிரீட் பாலம் அமைத்தால் 12 ஆயிரம் பேர் பயனடைவார்கள். 20 கிலோ மீட்டர் சுற்றி செல்வது குறைக்க ப்படும்.

தாராபுரம், வெள்ள கோவில் பகுதிக்கு செல்வதற்கான காலஅவகாசம் குறையும். பாலம் அமைக்கும் தீர்மானத்தை மாவட்ட திட்டக்குழு தலைவர் கொண்டு வந்தார்.

# தடுப்பூசி போடப்பட்ட 4 மாத குழந்தை பலி: போலீசார் தீவிர விசாரணை

திருப்பூர்,செப்.29

திருப்பூர் மாவட்டம் பல்லடத்தை அடுத்த அய்யம்பாளையம் பகுதியை சேர்ந்தவர்கள் கபின்ஏஞ்சலின் தம்பதியர். இவர்களுக்கு சுஜன் என்ற 4 மாத கைக்குழந்தை உள்ளது. நேற்று குழந்தைக்கு இரண்டாம் தடுப்பூசி செலுத்த முத்தாண்டிபாளையத்தில் உள்ள அங்கன்வாடி மையத்திற்கு சென்று ஊசி போட்டு விட்டு வீடு திரும்பியுள்ளனர்.

இந்நிலையில் இன்று காலை வீட்டிலிருந்த குழந்தை சுஜன் அசைவற்று கிடந்ததை கண்டு



அதிர்ச்சி அடைந்த பெற்றோர் மற்றும் உறவினர்கள் குழந்தையை சிகிச்சைக்காக பல்லடம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அந்த குழந்தையை பரிசோதித்த மருத்துவர்கள் குழந்தை ஏற்கனவே இறந்து விட்டதாக கூறியுள்ளனர்.

உடனே இச்சம்பவம் குறித்து பல்லடம் போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

அங்கு வந்த போலீசார் குழந்தையின் உடலை பிரேத பரிசோதனைக்காக திருப்பூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும் குழந்தையின் இறப்பிற்கான காரணம் குறித்து தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

தடுப்பூசி போடப்பட்ட குழந்தை திடீரென இறந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# வெள்ளலூர் குப்பை கிடங்கில் எந்திரத்தில் சிக்கி 2 கால்களையும் இழந்த தொழிலாளி

கோவை,செப்.29

கோவை வெள்ளலூரில் மாநகராட்சி குப்பை கிடங்கு உள்ளது. இங்கு குப்பையை தரம் பிரித்து உரமாக பிரிக்கும் பணி நடந்து வருகிறது.இதற்காக ராட்சத எந்திரங்கள் பயன்படுத்தப்படுகிறது. இங்கு கோண வாய்க்கால் பாளையத்தை சேர்ந்த சத்யா (வயது23) வேலை செய்து வருகிறார். இவர் இன்று காலை குப்பைகளை நசுக்கும் எந்திரத்துக்குள் சுத்தம் செய்து கொண்டு இருந்தார். அப்போது அங்கு வந்த மற்றொரு பணியாளர், சத்யா உள்ளே இருப்பதை கவனிக்காமல் எந்



திரத்தின்சுவிட்ச்சை ஆன் செய்ததார். கண் இமைக்கும் நேரத்தில் சத்யாவின் இரண்டு கால்களும் எந்திரத்துக்குள் சிக்கி நசுங்கியது. இதில் வலி தாங்க முடியாமல் அவர் சத்தம் போட்டார். இதனைக் கேட்டவர்கள் உடனடியாகஎந்திரத்தைஅணைத்தனர். இதில் அவரது இரண்டு கால்களும் எந்திரத்துக்குள் சிக்கி தொடை வரை நசுங்கி சிதைந்தது.

உடனடியாக அவர்கள் இதுகுறித்து கோவை தெற்கு தீயணைப்பு நிலையத்திற்கு தகவல் தெரிவித்தனர். உடனடியாக தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றனர். பின்னர் உயிருக்கு போராடிய சத்யாவை கயிறு கட்டி மீட்டனர். பின்னர் அவரை சிகிச்சைக்காக சாய்பாபா காலனியில் உள்ள தனியார் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவருக்கு டாக்டர்கள் சிகிச்சை அளித்து வருகிறார்கள். இதுகுறித்து போத்தனூர் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# 60 ஆண்டுகளாக பஸ் சேவை இல்லாத அணைப்பட்டி கிராமம்1½ கி.மீ நடந்து செல்லும் அவலம்

திண்டுக்கல்.செப்.29

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்டது அணைப்பட்டி கிராமம் சுமார் 3000 மக்கள் தொகை கொண்ட இந்த கிராமத்தில், 1200 வாக்காளர்கள் மற்றும் 100 மேற்பட்டபள்ளிமாணவ மாணவிகள் உள்ளனர். இந்த கிராமத்தில் பெரும்பான்மை விவசாயிகள் உள்ளனர். மேலும் கொத்தனார் மற்றும் கட்டிட வேலைக்கு செல்லும் பணியாளர்கள் அதிகம் உள்ளனர். தொழில் மற்றும் படிப்புக்காக திண்டுக்கலை அதிகம் நாடி வருகின்றனர். இந்த கிராமத்தில் 50 ஏக்கருக்கு மேல் தென்னை, வாழை, நெல் விவசாயம் செய்யப்பட்டு வருகிறது. இந்தப் பகுதியில் உள்ள மாணவர்கள் திண்டுக்கல்லில் உள்ள பள்ளிகளின் படித்து வருகின்றனர். கடந்த 60 ஆண்டுகளுக்



கும் மேலாக பஸ் சேவை இல்லாமல் கிராம மக்கள் தீவில் வசிப்பது போல் இருந்து வருகின்றனர். பள்ளி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் சுமார் 1½ கி.மீ தூரம் நடந்து சென்று பழனி ரோடு வந்து பஸ்ஸில் செல்லும் அவலநிலையில் தவித்து வருகின்றனர். அவ்வப்போது வரும் ஷேர் ஆட்டோக்களில் ஆபத்தான முறையில் அதிகமான ஆட்களுடன் பயணம் செய்து வருகின்றனர். இது குறித்து முன்னாள் நாட்டாமை காமாட்சி கூறுகையில் எனக்கு 65 வயதாகிறது. இதுவரை எங்கள்கிராமத்திற்கு பஸ் வந்ததே கிடையாது. 40 வருடங்களுக்கு முன்பு போடப்பட்ட சாலை. அதை அவ்வப்போது பேஜ் ஓர்க் மட்டும் செய்யப்பட்டு வருகிறது. திண்டுக்கல் க்கு செல்வதற்கு நடந்தே குழந்தைகள் பெரியவர்கள் வரை நடந்தே செல்லும் நிலை உள்ளது. பள்ளி நேரங்களில் மட்டும் பஸ் வசதி ஏற்பாடுசெய்துகொடுக்க வேண்டும் என்று தெரிவித்தார். பஸ் சேவை இல்லாததால் இந்த கிராமம் தீவு போல் காட்சியளிக்கிறது. அவசரதேவைகளுக்கு ஆம்புலன்ஸ் கூட வர தாமதமாகிறது. எனவே விரைந்து இப்பகுதிக்கு பஸ் வசதி செய்து தரவேண்டும் என உள்ளூர் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கூடங்குளம் கடலில் தரைதட்டிய மிதவை கப்பலில் இருந்து 2 ஜெனரேட்டர்கள் மீட்பு

நெல்லை,செப்.29

நெல்லை மாவட்டம் கூடங்குளம் அணுமின் நிலையத்தில் 2 அணு உலைகள் அமைக்கப்பட்டு மின்உற்பத்தி பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும் அங்கு 4 அணு உலைகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. இதில் 5, 6வது அணு உலைகள் அமைப்பதற்காக 4 நீராவி ஜெனரேட்டர்கள் ரஷியாவில் இருந்து கப்பலில் தூத்துக்குடி துறைமுகத்துக்கு கொண்டு வரப்பட்டது. அங்கிருந்து 2 நீராவி ஜெனரேட்டர்களை மிதவை கப்பல் மூலமாக கூடங்குளத்துக்கு கொண்டு வந்தனர். தொடர்ந்து மற்ற 2 நீராவி ஜெனரேட்டர்களை மிதவை கப்பலில் ஏற்றி, இழுவை கப்பல் மூலமாக கடந்த 8ந் தேதி கூடங்குளத்துக்கு கொண்டு சென்றனர். கூடங்குளம் பகுதியில்



சென்றபோது மிதவை கப்பலுக்கும், இழுவை கப்பலுக்கும் இடையிலான இணைப்பு துண்டிக்கப்பட்டது. இதனால் நீராவி ஜெனரேட்டர்களுடன் அலையில் இழுத்து செல்லப்பட்ட மிதவை கப்பல், கடற்கரையில் இருந்து சுமார் 300 மீட்டர் தூரத்தில் பாறை இடுக்கில் தரைதட்டியது. இதையடுத்து அதனை மீட்பதற்காக சென்னையில் இருந்து வரவழைக்கப்பட்ட சிறப்பு குழுவினர் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டனர். எனினும் பலனளிக்கவில்லை. மேலும் பாறையில்மோதியதில்மிதவை கப்பல் சேதமடைந்ததால் மூழ்கும் அபாயம் ஏற்பட்டது. தொடர்ந்து கடற்கரையில் இருந்து மிதவை கப்பல் வரையிலும் கடலுக்குள் சுமார் 300 மீட்டர் தூரத்துக்கு பாறாங்கற்கள், மண் கொட்டி இரவு பகலாக சாலை அமைத்தனர். தொடர்ந்து அந்த சாலை வழியாக நேற்று மதியம் அதிநவீன ஹைட்ராலிக் வசதியுடன் கூடிய 128 டயர்களைக் கொண்ட ராட்சத லாரி மெதுவாக பயணித்து மிதவை கப்பலை சென்றடைந்தது. மிதவைகப்பலில்இருந்த 2 நீராவி ஜெனரேட்டர்களையும் ஒவ்வொன்றாக மீட்கும் பணி நடைபெற்றது. அதன்படி லாரியுடன் இணைக்கப்பட்ட டயர்கள் பொருத்தப்பட்ட ஹைட்ராலிக் எந்திரமானது நீராவி ஜெனரேட்டரின் அடியில் சென்று, அதனை மெதுவாக தூக்கியது. தொடர்ந்து அதனை லாரி இழுத்தவாறு வெளியில் வந்தது. தொடர்ந்து மிதவைகப்பலில்இருந்த மற்றொரு நீராவி ஜெனரேட்டரையும் இரவில் மீட்டனர். மீட்பு பணிகளைகூடங்குளம்வளாக இயக்குனர் சுரேஷ் பார்வையிட்டார். கடலில் தரைதட்டிய மிதவை கப்பலில் இருந்து 19 நாட்களுக்கு பிறகு நீராவி ஜெனரேட்டர்கள் பத்திரமாக மீட்கப்பட்டன.

# சாலை பாதுகாப்பு விதிமுறைகளை அனைவரும் கடைப்பிடிக்க வேண்டும் கலெக்டர் அறிவுறுத்தல்

திருப்பூர்.செந்.29

திருப்பூர்கலெக்டர்அலுவலக கூட்டரங்கில் சாலைப்பாதுகாப்பு மற்றும் சட்டம் ஒழுங்கு குறித்து மாதாந்திர ஆய்வு கூட்டம் நடைபெற்றது. இதில் கலெக்டர் கிறிஸ்துராஜ் தெரிவித்ததாவது: பொதுமக்களிடையே சாலை விதிகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி,விபத்துகள் மற்றும் உயிரிழப்புகளை தவிர்க்கும் நோக்கில் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் தொடர்விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.விபத்துக்கான காரணங்களாக இருச்சக்கரவாகனங்களில் ஓட்டுநர் மற்றும் பின்னால் அமர்ந்து இருப்பவர் இருவரும் தலைகவசம் அணியாதது, குடிபோதையில் வாகனம் ஓட்டுவது, வாகனம் ஓட்டும் போது அலைபேசியை பயன்படுத்துவது, மோட்டார், கார் போன்ற 4 சக்கர வாகனங்களில் சீட்பெல்ட் அணியாததே காரணம். இதனை வலியுறுத்தி சாலைகளின் முக்கிய இடங்களில் விழிப்புணர்வு விளம்பர பதாகைகள் நெடுஞ்சாலைகள்துறையின்சார்பில் வாகன ஓட்டிகள் எளிதில் அறியும் வண்ணம் வைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சாலை விதிகளை



முறையாக கடைப்பிடிக்காதது மற்றும் சாலை ஓரங்களில உள்ள கடைகளினாலும், உணவுப்பொருட்களை வாங்க வரும் நபர்களும் சாலையில் வாகனத்தைநிறுத்துவதாலும் விபத்துகள் ஏற்படுகின்றது. அவற்றை தடுக்க காவல்துறை உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக, சாலை வளைவுகள், சாலை சந்திப்புகள், குறுகிய சாலைகள், போக்குவரத்து நெரிசல் மிக்க இடங்கள் போன்ற பகுதிகளில் அதிக வேகம் காரணமாக விபத்துகள் ஏற்படுகின்றன.

மேலும் சாலைகளில் எதிர் திசையில் வாகனத்தை ஓட்டுவதாலும், சாலைகளில் செல்லும் போது உரிய செய்கை இல்லாமல் வாகனத்தை திருப்புவதாலும் சாலை விபத்துகள் ஏற்படுகின்றன. எனவே வட்டார போக்குவரத்து அலுவலர்கள் மற்றும் காவல்துறை அலுவலர்கள் சாலை பாதுகாப்பு குறித்து தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

மேலும் பொதுமக்களுக்கு சாலை விதிகள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துதல் வேண்டும். சாலை பாதுகாப்பு மற்றும் சாலை விதிகள் குறித்து அனைத்து வாகன ஓட்டிகளுக்கும் தெரியும்வண்ணம்தொடர் விழிப்புணர்வு நடவடிக்கைகளை அனைத்துத் துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து மேற்கொள்ள வேண்டும். சாலைப்பா துகாப்பு என்பது ஒவ்வொரு தனி மனிதனும் சாலை விதிகளை கடைபிடித்து, விபத்தினை தவிர்ப்பதாகும். சாலை விபத்தினால் ஏற்படும் உயிரிழப்புகள், உறுப்பிழப்புகள் மற்றும் கொடுங்காயங்களின் விளைவாக மன அளவிலும், பொருளாதார நிலையிலும் பலகுடும்பங்கள் பாதிக்க ப்படுகின்றன. எனவே சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வில் அனைத்து மக்களின் பங்களிப்பும் மிக முக்கியமானதாகும். திருப்பூர் மாவட்டத்தை சாலை விபத்தில்லா மாவட்டமாக மாற்ற வட்டார போக்குவரத்து அலுவலர்கள் மற்றும் காவல் துறை அலுவலர்கள் முனைப்பாக செயல்பட வேண்டும். இவ்வாறு கலெக்டர் தெரிவித்தார். முன்னதாக சட்டம் மற்றும் ஒழுங்கு பராமரிப்பு குறித்து ஆய்வுக்கூட்டம் கலெக்டர் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சாமிநாதன், மாநகரதுணைகாவல் ஆணையர் (வடக்கு) அபிஷேக் குப்தா , மாவட்ட வருவாய் அலுவலர் ஜெய்பீம் , திருப்பூர் சப்கலெக்டர் ஸ்ருதன் ஜெய் நாரயணன் , மாநகர் துணை காவல்ஆணையர் (தெற்கு)வனிதா,மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (பொது) விஜயராஜ் மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலர்கள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# உடுமலை நாராயணகவி மணிமண்டபத்தில் குடிநீர் குழாய் அமைக்க வேண்டும் சமூக ஆர்வலர்கள் எதிர்பார்ப்பு

உடுமலை,செப்.29

உடுமலை நகராட்சிக்கு உட்பட்ட குட்டைத்திடலில் நாராயணகவி மணிமண்டபம் உள்ளது.கடந்த 2001ம் ஆண்டு முன்னாள் முதல்அமைச்சர் கருணாநிதியால் திறந்து வைக்கப்பட்ட இந்த மணிமண்டபம் தற்போது வரையிலும் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. போட்டி தேர்வுக்கு தயாராகும் மாணவர்கள் இங்கு வந்து புத்தகங்கள் மற்றும் செய்தித்தாள்களில் குறிப்புகள் எடுத்து பயன் அடைந்து வருகின்றனர். அதன் பயனாக ஒரு சிலர் அரசு பதவிகளையும் அலங்கரித்து வருவதாக தெரிகிறது. ஆனால் அடிப்படை வசதியில் ஒன்றான



குடிநீர் கிடைப்பதில் தொடர்ந்து சிக்கல்கள் நிலவி வருகிறது.

அதைத் தொடர்ந்து மணிமண்டபத்தை நிர்வகித்து வரும் மாற்றுத்திறனாளி பணியாளர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி அருகே அமைக்கப்பட்டுள்ள குடிநீர் குழாய்க்கு சென்று குடிநீர் பிடித்து வந்து தேர்வர்களுக்கு அளித்து வருகிறார். இதற்காக இவர் நாள்தோறும் உடுமலை திருமூர்த்திமலை பிரதான சாலையை கடந்து செல்ல வேண்டிய நிலை உள்ளது. போக்குவரத்து நெரிசல் மிகுந்த இந்த சாலையை திடகாத்திரமான உடல் நிலையில் உள்ளவரே கடப்பதற்கு சிரமப்பட வேண்டிய நிலையில், மாற்றுத்திறனாளி ஒருவர் கடந்து செல்வது இயலாத காரியமாகும். மணிமண்டபத்தில் குடிநீர் குழாய் அமைத்து தரக்கோரி கோரிக்கை வைத்தும் நகராட்சி நிர்வாகம் செவிசாய்க்கவில்லை. இதனால் தேர்வர்களும், பணியாளரும் அவதிக்கு உள்ளாகி வருகிறார்கள். எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நாராயணகவி மணிமண்டபத்தில் குடிநீர் குழாய் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது சமூக ஆர்வலர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

# ஏ.சி., இயங்காததால் திருப்பூரில் ரெயிலை நிறுத்தி பயணிகள் போராட்டம்

திருப்பூர்,செப்.29

கர்நாடகமாநிலம்ஹூப்ளியில் இருந்து கேரள மாநிலம் கொச்சுவேலிக்கு சேலம், ஈரோடு, திருப்பூர் வழியாக எக்ஸ்பிரஸ் ரெயில் இயக்கப்படுகிறது. இந்த ரெயில் நேற்று மதியம் ஹூப்ளியில் இருந்து கொச்சுவேலிக்கு புறப்பட்டது. பெங்களூரு ரெயில் நிலையத்திற்கு வந்த போது அந்த ரெயிலின் ஏ1 குளிர்சாதன பெட்டியில் ஏ.சி.யில் பழுது ஏற்பட்டது. ஏ.சி. சரியாக இயங்காததால் அந்த பெட்டியில் பயணித்த பயணிகள் மிகவும் அவதிக்குள்ளாகினர். இது குறித்து ரெயில்வே அதிகாரிகளிடம் புகார் தெரிவித்தனர். அவர்கள் சரி செய்வதாக கூறியுள்ளனர். ஆனால் பழுதான ஏ.சி.யை சரி செய்ய எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்தநிலையில் சேலம், ஈரோட்டை கடந்து நேற்றி




ரவு 11 மணிக்கு ரெயில் திருப்பூர்ரெயில் நிலையம் வந்தது. அங்கேயும் ஏ.சி.யை சரி செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை. இதனால் ஆத்திரமடைந்த ஏ1 பெட்டியில் பயணித்த பயணிகள் ரெயில் புறப்பட தயாரான போது அபாய சங்கிலியை பிடித்து இழுத்து நிறுத்தினர். இதைப் பார்த்த திருப்பூர் ரெயில் நிலைய அதிகாரிகள், போலீசார் அதிர்ச்சியடைந்தனர். உடனே அதிகாரிகள் மற்றும் போலீசார், குளிர்சாதன பெட்டியில் பயணித்த பயணிகளிடம் பேச்சு வார்த்தை நடத்தினர். அப்போது பயணிகள், நாங்கள் பணம் கொடுத்து தான் பயணிக்கிறோம். பெங்களூரில் இருந்து ஏ.சி. இயங்காததால் பயணிப்பதில் மிகவும் சிரமமாக உள்ளது. உடனே சரி செய்து தாருங்கள் என்று அதிகாரிகள், போலீசாரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. உடனே அதிகாரிகள், கோவை போத்தனூர் சென்றதும் மாற்று ஏற்பாடு செய்யப்படும் என்று தெரிவித்தனர். இதையடுத்து பயணிகள் போராட்டத்தை கைவிட்டனர். பின்னர்ரெயில்திருப்பூரில் இருந்து புறப்பட்டு சென்றது. போத்தனூர் சென்றதும் அங்கு ஏ.சி. பழுதான ஏ1 பெட்டி மாற்றப்பட்டு மாற்றுப்பெட்டி இணைக்கப்பட்டது. அதன்பிறகு பயணிகள் நிம்மதியுடன் பயணித்தனர். ஏ.சி.இயங்காததால் பயணிகள் ரெயிலை நிறுத்திய சம்பவம் திருப்பூரில் பரபரப்பை ஏற்படுத்தியது. மேலும் இந்த சம்பவம் காரணமாக திருப்பூர் ரெயில் நிலையத்தில் இருந்து அரை மணிநேரம் தாமதமாக கொச்சுவேலிக்கு ரெயில் புறப்பட்டு சென்றது. இதனால் பயணிகள் சற்று சிரமம் அடைந்தனர்.

# பண்ருட்டியில் அரசு டெப்போவில் 4 பஸ்கள் தீப்பிடிப்பு

பண்ருட்டி,செப்.29

கடலூர் மாவட்டம் பண்ருட்டியில் கும்பகோணம் செல்லும் சாலையில் அரசு போக்குவரத்துக் கழக டெப்போ இயங்கி வருகிறது. கடலூர், விழுப்புரம், உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கு செல்லக்கூடிய அரசு பஸ்கள் இந்த டெப்போவில் இருந்துதான் தினமும் சென்று வருவது வழக்கம். இந்த டெப்போவில் ஏலம் விடப்பட்ட சுமார் 50க்கும் மேற்பட்ட பழைய பஸ்கள் நிறுத்தி வைத்துள்ளனர். தற்போது இந்த பழைய பஸ்களில் இருந்து உபயோகமான பொருட்களை வெல்டிங் வேலை ஆட்கள் மூலம் பிரித்து எடுத்து வந்தனர். நேற்று இந்த வெல்டிங் வேலை நடந்தது. பின்னர் மாலையில்வேலைமுடிந்து வெல்டிங் வேலை ஆட்கள் அங்கிருந்து சென்று விட்டனர். நள்ளிரவு 12 மணிக்கு டெப்போவில் நிறுத்தி வைக்கப்பட்டு வெல்டிங் வேலை பார்க்கப்பட்ட பழைய பஸ் ஒன்று திடீரென தீப்பிடித்து எரிந்தது. இந்த தீ மளமளவென பரவி அந்த பஸ் முழுவதும் எரிந்தது சேதமானது. மேலும் இந்த தீ அருகில் இருந்த 3 பஸ்களுக்கும் பரவி அந்த பஸ்களின் முன்பகுதி சேதமானது. இதனால் அந்த இடமே புகை மண்டலமாக காட்சி அளித்தது. இதை பார்த்த டெப்போவில் இருந்தவர்கள் இந்த சம்பவம் குறித்து டெப்போ அதிகாரிகளுக்கும், பண்ருட்டி தீயணைப்பு நிலைய அதிகாரிகளுக்கும் தகவல் தெரிவித்தனர். தீயணைப்புத்துறை அதிகாரி வேல்முருகன் தலைமையிலான தீயணைப்பு படை வீரர்கள்சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று அருகில் இருந்த மற்ற பஸ்களுக்குதீ பரவாமல் போராடி தீயை அணைத்தனர். இது குறித்த புகாரின்பேரில் பண்ருட்டி போலீசார் வழக்குப் பதிவு செய்து பஸ் தீப்பிடித்தற்கான காரணம் என்ன? என்பது குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர். டெப்போவில் இருந்த பஸ் தீப்பிடித்து எரிந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023 29.09.2023

# கர்நாடகத்திற்கு ஆதரவாக குரல் கொடுக்காவிட்டால்... ரஜினிக்கு மிரட்டல் விடுத்த வாட்டாள் நாகராஜ்




பெங்களூரு,செப்.29 சுப்ரீம் கோர்ட்டு உத்தரவுப்படி தமிழகத்திற்கு காவிரி நீர் திறக்கப்பட்டுள்ளது. இதை கண்டித்து பெங்களூருவில் நேற்று முன்தினம் முழு அடைப்பு போராட்டம் நடைபெற்றது. தொடர்ந்து நாளை கர்நாடக மாநிலம் முழுவதும் முழு அடைப்பு போராட்டம் நடைபெற உள்ளது. இந்த முழு அடைப்புக்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட கன்னட சங்கங்கள் ஆதரவு வழங்கியுள்ளன. இதனால் தலைநகர் பெங்களூரு மீண்டும் முடங்கும் என்று தெரிகிறது. இந்த நிலையில்நேற்றுகன்னட சலுவளி வாட்டாள் கட்சியின் தலைவர் வாட்டாள் நாகராஜ் தலைமையில் பெங்களூரு சிவானந்த சர்க்கிளில் உள்ள முதல் மந்திரி சித்தராமையாவின் இல்லத்தை முற்றுகையிட முயன்றனர். அவர்களை போலீசார் கைது செய்தனர். இதுகுறித்து வாட்டாள் நாகராஜ் கூறுகையில், 'எக்காரணம் கொண்டும் தமிழகத்திற்கு காவிரி நீர் திறக்கக்கூடாது.

இதை கண்டித்து 29ந்தேதி (நாளை) கர்நாடகத்தில் முழு அடைப்பு நடத்துகிறோம். கன்னட சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் நடத்துகிறோம்.

நடிகர் ரஜினிகாந்த் பெங்களூரு வந்து செல்கிறார். அவா' இங்கு இருந்தபோது காவிரி நீர் குடித்துள்ளார். அதனால் அவர் காவிரி பிரச்சனையில், கர்நாடகத்திற்கு ஆதரவாக குரல் கொடுக்க வேண்டும். கர்நாடகத்தின் நிலையை எடுத்துக் கூற வேண்டும். இல்லாவிட்டால் அவரது படத்தை கர்நாடகத்தில் திரையிட விடமாட்டோம்' என்றார்.



## கொலை மிரட்டல் விடுக்கும் என்ஜினீயர்.. பாபி சிம்ஹா பரபரப்பு பேட்டி

கொடைக்கானல்பழனி சாலையில் பெருமாள் மலை அடுத்த வில்பட்டி ஊராட்சி பேத்துப்பாறையில் நடிகர் பாபிசிம்ஹா தனது பெற்றோர் பெயரில் வீடு கட்டி வருகிறார்.

இதற்காக கொடைக்கானலை சேர்ந்த ஜமீர் என்ற காண்ட்ராக்டருடன் ஒப்பந்தம் செய்தார். ஜமீரின் உறவினரான காதர் இந்த ஒப்பந்தம் ஏற்படுவதற்கு பரிந்துரை செய்துள்ளார்.

பாபிசிம்ஹாவும், காதரும் நண்பர்கள் என்பதால் அதனடிப்படையில் வீடு கட்டி கொடுக்க இருவரும் சம்மதித்தனர். கட்டுமான பணிகள் செய்வதற்காக பாபிசிம்ஹாவிடம் ஜமீர் ரூ.1. கோடியே 70 லட்சம் பெற்றுக்கொண்டு வீட்டை கட்டி தராமல் இழுத்தடித்து வந்துள்ளார். பணிகள் பாதியில் நிற்கவே இது குறித்து ஜமீரிடம் கேட்டபோது கூடுதலாக பணம் கொடுத்தால்தான் வீட்டை கட்டி முடிக்கமுடியும் என தெரிவித்துள்ளார். மேலும் கட்டுமான பணிகளை பாதியில் நிறுத்தி சென்றதால் பாபிசிம்ஹா அதிர்ச்சி அடைந்தார். இதையடுத்து ஜமீர், உசேன், பேத்துப்பாறையை சேர்ந்த மகேந்திரன் ஆகியோர் மீது பாபி சிம்ஹா புகார் அளித்தார். போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர்.

இதனிடையே பாபிசிம்ஹா மற்றும் கே.ஜி.எப். பட வில்லன், நடிகர் ஆகியோர் ஜமீரை மிரட்டியதாக கொடைக்கானலில் மற்றொரு வழக்குப்பதிவு செய்யப்பட்டது. இந்நிலையில் பாபிசிம்ஹா கொடைக்கானலில் நிருபர்களுக்கு அளித்தபேட்டியில் கூறியதாவது, ஜமீரின் மைத்துனரான காதர் எனது நண்பர். அவர் சொன்னதால்தான் ஜமீருக்கு வீடுகட்ட ஒப்பந்தம் செய்து கொடுத்தேன். ரூ.1.70 கோடி பணம் வாங்கி கொண்டு தரமற்ற கட்டிடப்பணிகளை செய்துள்ளனர். பொருட்கள் வாங்கியதற்கான ரசீதுகள் என்னிடம் கொடுக்கவில்லை.

முறைகேடு செய்தது குறித்து கேட்டபோது உள்ளூர் மக்களை திரட்டி எனக்கு கொலை மிரட்டல் விடுக்கின்றனர். ஒரு நடிகரான எனக்கே இதுபோன்ற மிரட்டல்கள் வருகிறது என்றால் சாதாரண மக்களின் பாதுகாப்புஎவ்வாறுஇருக்கும்.எனசந்தேகம்எழுந்துள்ளது.

பலமற்ற தரைத்தளம்,செட் அமைத்தது போல கட்டிட பணிகளை மோசமான நிலையில் கட்டி கொடுத்துள்ளனர்.

இதனை நான் புகாராக தெரிவித்தால் எனக்கு தொடர்ந்து மிரட்டல்கள் வந்தவண்ணம் உள்ளது. எனவே இதுகுறித்து நீதிமன்றத்தில் வழக்குதொடர உள்ளேன். அங்கு எனக்கு நியாயம் கிடைக்கும் என எதிர்பார்க்கிறேன். 30 வருடமாக வசித்து வரும் தன்னை கொடைக்கானலை சேர்ந்த சிலர் சமூகஆர்வலர் என்ற பெயரில் கூறிக்கொண்டு தொடர்ந்து மிரட்டல் விடுத்து வருவது வேதனை அளிக்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.

## நடிகர் சித்தார்த்துக்கு கன்னட அமைப்பினர் எதிர்ப்பு பிரகாஷ் ராஜ் கண்டனம்

பெங்களூரு: பண்ணையாரும் பத்மினியும்', 'சேதுபதி', 'சிந்துபாத்' உள்ளிட்ட படங்களை இயக்கிய அருண்குமார் இயக்கத்தில் நடிகர் சித்தார்த் நடித்துள்ள திரைப்படம் 'சித்தா'. இந்த படத்தை நடிகர் சித்தார்த் தன்னுடைய இடாகி என்டர்டெயின்மென்ட் நிறுவனம் சார்பில் தயாரித்துள்ளார். இந்த திரைப்படம் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் உள்ளிட்ட மொழிகளில் நேற்று வெளியாகி உள்ளது. இந்த நிலையில் 'சித்தா' படத்தின் புரொமோஷன் நிகழ்ச்சிக்காக நடிகர் சித்தார்த் பெங்களூரு சென்றுள்ளார். அங்கு நடைபெற்ற பத்திரிக்கையாளர் சந்திப்பில் கலந்து கொண்டு நடிகர் சித்தார்த் பேசிக்கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த கன்னட அமைப்பினர் இந்த புரொமோஷன் நிகழ்ச்சிக்கு எதிர்ப்பு தெரிவித்தனர். காவிரி விவகாரத்தில் கன்னட அமைப்பினர், தமிழ்நாட்டிற்கு கண்டனம் தெரிவித்து வரும் நிலையில் தமிழ் நடிகரான சித்தார்த்துக்கு எதிர்ப்பு தெரிவித்தனர். இதையடுத்து அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது. கன்னட அமைப்பினரின் எதிர்ப்பைத் தொடர்ந்து மேடையில் இருந்து நடிகர் சித்தார்த் வெளியேறினார். இதையடுத்து அந்த நிகழ்ச்சி நிறுத்தப்பட்டது. இந்நிலையில் சித்தார்த்தை தொந்தரவு செய்வதை ஏற்க முடியாது என்று நடிகர் பிரகாஷ் ராஜ் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் வலைதளத்தில், "நீண்ட காலமாக இருக்கும் பிரச்சனையை தீர்க்காமல் வைத்திருக்கும் அனைத்து



அரசியல் கட்சிகளையும், மத்திய அரசை தலையிட வைக்க அழுத்தம் கொடுக்காத எம்.பி.க்களையும் கேட்பதற்கு பதிலாக, சாதாரண மக்களையும் , சித்தார்த் போன்ற கலைஞர்களையும் தொந்தரவு செய்வதை ஏற்றுக் கொள்ள முடியாது. ஒரு கன்னடராக அனைத்து கன்னட மக்களின் சார்பாக மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன்" என்று அதில் பிரகாஷ் ராஜ் பதிவிட்டுள்ளார்.

## ரசிகர் வீட்டிற்கு நேரில் சென்று அஞ்சலி செலுத்திய சூர்யா

தென்னிந்திய திரையுலகின் முன்னணி நடிகரான சூர்யா தற்போது, இயக்குனர் சிவா இயக்கத்தில் 'கங்குவா' படத்தில் நடித்து வருகிறார். ஸ்டுடியோகிரீன் மற்றும் யுவி கிரியேஷன் நிறுவனம் இணைந்து தயாரிக்கும் இந்த படத்தில் பாலிவுட் நடிகை திஷா பதானி, யோகி பாபு, கிங்ஸ்லி, கோவை சரளா, ஆனந்த் ராஜ் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். 3டி முறையில் சரித்திர படமாக 10 மொழிகளில் வெளியாகவுள்ள இப்படத்திற்கு தேவி ஸ்ரீ பிரசாத் இசையமைக்கிறார். 'கங்குவா' திரைப்படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.



இந்நிலையில், நடிகர் சூர்யா விபத்தில் உயிரிழந்த ரசிகர் வீட்டிற்கு சென்று அஞ்சலி செலுத்தியுள்ளார். அதாவது, சூர்யாநற்பணி இயக்கத்தைச் சேர்ந்த அரவிந்த் (24) என்பவர் கடந்த 24.08.2023 அன்று சாலை விபத்தில் உயிரிழந்தார். இந்த செய்தியறிந்த நடிகர் சூர்யா எண்ணூரில் உள்ள ரசிகரின் வீட்டுக்கு நேரில் சென்று தனது அஞ்சலியை செலுத்திவிட்டு, அவரின் பெற்றோருக்கு ஆறுதல் கூறினார். இது தொடர்பான புகைப்படம் இணையத்தில் வைரலாகி வருகிறது.

## என் குணம் கொண்ட என் உயிர் உலகே.. நயன் விக்கி குழந்தைகள் பிறந்தநாள் கொண்டாட்டம்




திரையுலகின் பிரபலங்களான நயன்தாரா விக்னேஷ் சிவன் தம்பதி காதலித்து திருமணம் செய்து கொண்டனர். இவர்கள் வாடகைத் தாய் மூலம் இரட்டைக் குழந்தைகளுக்கு பெற்றோர் ஆனர். உயிர் ருத்ரோ நீல் உலக் தெய்வக் என தங்கள் குழந்தைகளுக்குப் பெயரிட்டுள்ள நயன் விக்னேஷ் தம்பதி, தொடர்ந்து குழந்தைகளின் புகைப்படங்களை இணையத்தில் பதிவிட்டு வருகின்றனர். இந்நிலையில், நயன் விக்கி தம்பதி தங்களது குழந்தைகளான உயிர் மற்றும் உலக்கின் முதல் பிறந்தநாளை நெருங்கிய உறவினர்களுடன் கேக் வெட்டி கொண்டாடியுள்ளனர். இது தொடர்பான புகைப்படத்தை இயக்குனர் விக்னேஷ் சிவன் தனது சமூக வலைதளத்தில் பகிர்ந்துள்ளார்.

## உத்து பாத்தேன்.. என்னவிட கெட்டவன் எவனும் இல்ல வைரலாகும் அனிமல் டீசர்



பாலிவுட்டின் பிரபல நடிகரான ரன்பீர் கபூர் தற்போது 'அர்ஜுன் ரெட்டி', 'கபீர் சிங்' போன்ற படங்களை இயக்கிய இயக்குனர் சந்தீப் ரெட்டி வங்கா இயக்கத்தில் 'அனிமல்' திரைப்படத்தில் நடித்துள்ளார். இவருக்கு ஜோடியாக ரஷ்மிகா மந்தனா நடித்துள்ளார். இந்த படத்தில் அனில் கபூர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருக்கிறார். பூஷன் குமார் மற்றும் பிரணவ் ரெட்டி வங்கா இணைந்துடிசீரிஸ்மற்றும்பத்ரகாளிபிக்சர்ஸ்மூலம்இப்படத்தைதயாரித்துள்ளனர். இப்படம் வருகிற டிசம்பர் 1 ஆம் தேதி இந்தி, தெலுங்கு, தமிழ், கன்னடம் மற்றும் மலையாளம் ஆகிய மொழிகளில் திரையரங்குகளில் வெளியாகவுள்ளது. இதையடுத்து 'அனிமல்' படத்தின் டீசர் இன்று வெளியாகும் என படக்குழு அறிவித்திருந்தது. அதன்படி, இப்படத்தின் டீசர் வெளியாகியுள்ளது. அதிரடி ஆக்ஷன் காட்சிகளுடன் 'உத்து பாத்தேன்.. என்னவிட கெட்டவன் எவனும் இல்ல' போன்ற வசனங்கள் இடம்பெற்றுள்ள இந்த டீசரை ரசிகர்கள் வைரலாக்கி வருகின்றனர்.

# 15 பேர் கொண்ட உலக கோப்பை அணி பற்றி தெளிவாக இருக்கிறோம் கேப்டன் ரோகித்சர்மா



ராஜ்கோட்டில் நேற்று நடந்த ஆஸ்திரேலியாவுக்கு எதிரான 3வது மற்றும் கடைசி ஒரு நாள் போட்டியில் இந்தியா தோல்வி அடைந்தது. முதல் 2 ஆட்டங்களில் வென்றதால் தொடரை 21 என்ற கணக்கில் இந்தியா கைப்பற்றியது. இப்போட்டிக்கு பிறகு இந்திய கேப்டன் ரோகித் சர்மா கூறியதாவது: நான் பார்முக்கு திரும்பியதில் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. கடந்த 8 ஒரு நாள் போட்டிகளில் வெவ்வேறு சூழ்நிலைகளில் நாங்கள் நன்றாக விளையாடினோம். வெவ்வேறு சமயங்களில் சவாலுக்கு ஆளானோம். அந்த சவாலை ஏற்றுக் கொண்டு விளையாடினோம். துரதிஷ்டவசமாக நாங்கள் வெற்றி பெறவில்லை. ஆனால் இந்த ஆட்டத்தை அதிகம் பார்க்க போவதில்லை. உலக கோப்பைக்காக 15 பேர் கொண்ட அணியை பற்றி பேசும்போது, எங்களுக்கு என்ன தேவை, யார் சரியாக இருப்பார்கள் என்பதில் தெளிவாக இருக்கிறோம். நாங்கள் குழப்பமடையவில்லை. நாங்கள் எதை நோக்கி செல்கிறோம் என்பது எங்களுக்கு தெரியும்" என்றார்.



# உலகக் கோப்பை 2023 இந்திய அணியில் இடம்பிடித்த அஸ்வின்

உலகக் கோப்பை 2023 கிரிக்கெட் தொடர் அடுத்த வாரம் துவங்குகிறது. இந்தியாவில் நடைபெற இருக்கும் உலகக் கோப்பை தொடருக்கான இந்தியா அணி ஏற்கனவே அறிவிக்கப்பட்டு விட்டது. இந்த நிலையில், உலகக் கோப்பை 2023 தொடருக்கான இந்திய அணியில் திடீர் மாற்றம் செய்யப்பட்டு இருக்கிறது. முன்னதாகஇந்திய அணியில் சேர்க்கப்பட்டு இருந்த அக்சர் பட்டேல், காயம் காரணமாக விலகிய நிலையில், அவருக்கு பதிலாக தற்போது அஸ்வின் சேர்க்கப்பட்டு இருக்கிறார். முன்னதாக உலகக் கோப்பை தொடருக்கான இந்திய அணியில் அஸ்வின் சேர்க்கப்படாதது குறித்து பலர் ஏமாற்றம் தெரிவித்து இருந்தனர்.தற்போது இந்திய அணியில் அஸ்வின் சேர்க்கப்பட்டு இருப்பது அவரின் ரசிகர்கள் மட்டுமின்றி, இந்திய அணி ரசிகர்களுக்கும் மகிழ்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது. 2011, 2015 என இரு உலகக் கோப்பை தொடர்களில் அஸ்வின் விளையாடி இருக்கும் நிலையில், தற்போது 2023 உலகக் கோப்பைதொடரில் களமிறங்குவதன் மூலம், மூன்றாவது 50 ஓவர் உலகக் கோப்பை தொடரில் அஸ்வின் விளையாட இருக்கிறார்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.